# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● மே 27, 2023

Weekly E-paper ● May 27, 2023




# சோழர் செங்கோல்!

சுப.வீரபாண்டியன்

## வெற்றி முதலீடுகளுடன் தாயகம் திரும்பும் முதல்வர்!

வழக்கறிஞர் இராம.வைரமுத்து

## இதுவும் ஒரு குறியீடு!

தலையங்கம்

## கருப்புப் பணம் இல்ல; கள்ளப் பணம் !

பேராசிரியர் நாகநாதன்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2054 ● மே 27, 2023


Weekly E-paper ● May 27, 2023


# சோழர் செங்கோல்!

**சுப.வீரபாண்டியன்**

*ஆன்ட்டி– இந்தியன் (anti– Indian) என்பவர்கள் யார்? அவர்களுக்கு ஏதேனும் அடையாளம் இருக்கிறதா? ஆம், நிறைய அடையாளங்கள் இருக்கின்றன. இன்றைய சூழலில் இந்த அடையாளங்களை வைத்து அவர்களைக் கண்டுபிடித்து விடலாம்!*

*1. புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தின் அடிக்கல் நாட்டு விழா அல்லது பூமி பூஜைக்கு, அன்றைய குடியரசுத் தலைவரை அழைக்கவில்லை. அதேபோல அந்தக் கட்டிடத் திறப்பு விழாவிற்கு இன்றைய இந்தியக் குடியரசுத் தலைவரையும் அழைக்கவில்லை. அவர் பட்டியல் இனத்தைச் சேர்ந்தவர், இவர் பழங்குடி வகுப்பைச் சேர்ந்தவர் என்பதாலா என்று கேட்பார்கள்!*



*2. அரியணை, மகுடம், வெண்கொற்றக் குடை, செங்கோல் இவை எல்லாம் மன்னர் ஆட்சியின் குறியீடுகள்! இவற்றுள் ஒன்றான செங்கோல், மக்களாட்சியில் ஏன் வருகிறது என்று குதர்க்கம் பேசுவார்கள்.*

*3. செங்கோல் மாற்றம், அதிகாரம் மாற்றத்திற்கான அடையாளம் என்றால், இப்போது அதற்கு என்ன வேலை? நடக்கப் போவது அதிகார மாற்றமா, கட்டிட மாற்றமா என்ற கேள்வியையும் எழுப்புவார்கள்!*

*4. குடியரசு நாளிலோ, இந்தியா விடுதலை பெற்ற நாளிலோ அல்லாமல், சாவர்க்கர் பிறந்தநாளான மே 28 இல் எதற்காக இந்தக் கட்டிடத் திறப்பு விழா என்றும் வினவுவார்கள்!*

*5. ராஜாஜி தொடக்கி வைத்து, சங்கராச்சாரியார் எடுத்துச் சொல்லி, துக்ளக்கில் கட்டுரையாக வந்து, பத்மா சுப்ரமணியத்தால் மொழிபெயர்க்கப்பட்டு, இன்று அரியணை ஏறும் செங்கோல், முற்றுமாக ஒரு “நூல்இழை”யில் இணைக்கப்பட்டிருக்கிறது. இப்போது ஒரு மடத்தின் ஆதீனம் அதைக் கொடுக்க இருக்கிறார். மதச்சார்பற்ற நாட்டில், ஏன் இப்படிக் குறிப்பிட்ட ஒரு மதத்தின் தொடர்புகள் ஆட்சி அதிகாரத்தோடு பிணைக்கப்படுகின்றன என்று நாத்திகம் பேசுவார்கள்!*

*இவையெல்லாம் தான் ஆன்ட்டி இந்தியன் என்பதற்கான அடையாளங்கள்! கவனம் வைத்துக் கொண்டு, அவர்களோடு பழகுவதைத் தவிர்த்து விடுங்கள்! இதனைத் தாண்டி இன்னும் இரண்டு கேள்விகள் இருக்கின்றன. அவை இவற்றை விட மோசமானவை!*

*1. சில ஆண்டுகளுக்கு முன்பு, தருண் விஜய் என்பவர் திருக்குறளைப் புகழ்ந்து பேசி, திருவள்ளுவர் சிலையைத் தில்லிக்கு எடுத்துச் சென்றாரே, அது என்னாயிற்று? அதே போலத்தான் இப்போது, பிரதமர் மோடி தமிழைப் புகழ்ந்து பேசுவதும், செங்கோல் தமிழர் மரபு, இது சோழர் செங்கோல் என்று கூறுவதும், தமிழர்களை மீண்டும் ஏமாற்றுவதற்காகவா என்ற வினாவைத் தொடுப்பார்கள்.*

*2. சோழர் செங்கோல், சனாதனத்தை, சாதி அடுக்குகளை ஆதரித்த ஒன்றாயிற்றே, சமூக நீதிக்கு எதிராக வளைந்த செங்கோலும் அதுவன்றோ என்றும் கேட்பார்கள்!*

*இவர்கள் ஆன்ட்டி - இந்தியன் மட்டுமில்லை, தமிழ்த் தேசியப் பேராசான்கள் நடத்தும் பரிசோதனைக் கூடங்களில், ஆன்ட்டி தமிழர்கள் என்றும் கண்டுபிடிக்கப் பட்டவர்கள்.*

*கவனம், தமிழர்களே கவனம்!*

*ஆன்ட்டி - இந்தியனாகவும், ஆன்ட்டிN - தமிழனாகவும் ஆகிவிடாதீர்கள்! ஜெய் ஸ்ரீ ராம் என்று N உரத்து முழங்கும் தேஷ பக்தர்களாகவும், தமிழ்த் தேசியம் பேசும் தம்பிகளாகவும் எப்போதும் இருந்திட முயற்சி செய்யவும்!* ●

# வெற்றி முதலீடுகளுடன் தாயகம் திரும்பும் முதல்வர்!

**வழக்கறிஞர் இராம.வைரமுத்து**

“திரைகடல் ஓடியும் திரவியம் தேடு” என்ற முதுமொழிக்கேற்ப தாய்த்தமிழ்நாட்டின் வர்த்தகத்தை வளர்த்தெடுக்க முதலீடுகளை ஈர்க்கும் வண்ணம் அயல்நாடுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார் திராவிட மாடல் நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின். ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டு ஆண்டுகளை நிறைவு செய்திருக்கும் சூழலில் இது இவரது இரண்டாவது அயலகப் பயணம் ஆகும்.

2030-2031 நிதியாண்டிற்குள், தமிழ்நாட்டின் பொருளாதாரத்தை 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு மேம்படச் செய்வதை லட்சிய இலக்காகக் கொண்டு திராவிட மாடல் அரசு செயலாற்றி வருகிறது. இதற்காக ரூ.23 லட்சம் கோடி அளவிற்கு முதலீடுகளை ஈர்த்து 46 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பினை உருவாக்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

ஜூலை 2021 முதல் தற்போது வரை 226 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு, தமிழ்நாட்டில் ரூ. 2,95,339 கோடி அளவிற்கு முதலீடுகள் மற்றும் 4,12,565 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. “அனைவரையும் உள்ளடக்கிய சமச்சீரான வளர்ச்சி” என்ற அரசின் நோக்கத்திற்கு ஏற்ப தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் இந்தத் திட்டங்கள் பரவலாக அமைகின்றன.

தமிழ்நாட்டிற்கு புதிய முதலீடுகள் மற்றும் நவீன தொழில்நுட்பங்களை கொண்டு வரும் பொருட்டு வரும் ஜனவரி 2024-இல் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு அழைப்பு விடுக்க அரசு முறைப் பயணமாக சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு சென்றுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிங்கப்பூரில் அந்நாட்டின் போக்குவரத்து, தொழில் மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் ஈஸ்வரன், உள்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் கே.சண்முகம், அந்நாட்டின் முன்னணி தொழில் நிறுவனங்களான டெமாசெக் (Temasek), செம்கார்ப் (Sembcorp) மற்றும் கேப்பிட்டாலாண்டு இன்வஸ்மன்ட் (CaptiaLand Investment) போன்ற நிறுவனங்களின் அதிபர்கள் மற்றும் முதன்மைச் செயல் அலுவலர்களையும் சந்தித்து உரையாடினார்.

சிங்கப்பூரில் நடைபெற்ற முதலீட்டாளர்கள் மாநாட்டில் பங்கேற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்துடன் Singapore Indian Chamber of Commerce and Industries (SICCI), தமிழ்நாடு அரசின் சிப்காட் நிறுவனத்திற்கும் Singapore India Partnership Office (SIPO), தமிழ்நாட்டின் FameTN மற்றும் Startup TN நிறுவனங்களுக்கும் Singapore India Partnership Office (SIPO), தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும் Singapore Hi-P International Pvt. Ltd., தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்திற்கும், Singapore University of Technology & Design (SUTD), தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்திற்கும் Singapore ITE Education Services என ஆறு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன.

சிங்கப்பூர் தமிழ் அமைப்புகள் இணைந்து நடத்திய கலாச்சார



சந்திப்பு நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய முதல்வர் மு.க. ஸ்டாலின் சிங்கப்பூரில் தமிழ் மற்றும் தமிழர் வளர்ச்சிக்கு உதவிய அந்நாட்டின் முதல் பிரதமர் லீ குவான் யூ அவர்களுக்கு தமிழ்நாட்டின் மன்னார்குடியில் நினைவுச் சின்னம் (சிலை மற்றும் நூலகம்) அமைக்கப்படும் என்று அறிவித்தது தமிழர்களின் நன்றி உணர்வை தரணிக்கு பறை சாற்றும் விதமாக அமைந்தது. அத்துடன் புலம்பெயர் தமிழ் இளைஞர்கள் 200 பேர் ஆண்டுதோறும் தமிழ்நாடு வந்து தொடர்பினை புதுப்பித்துக் கொள்ளும் கலாச்சார பரிமாற்ற சுற்றுலா திட்டமான “வேர்களைத் தேடி” திட்டத்தையும் தொடங்கி வைத்தார்.

சிங்கப்பூர் பயணத்தை முடித்துக் கொண்டு ஜப்பான் சென்றுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அந்நாட்டின் பொருளாதாரம் வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சர் நிஷிமுரா யசுதோஷி மற்றும் ஜப்பான் தொழில் நிறுவனமான, ஜெட்ரோ தலைவர் இஷிகுரோ நொரிஹிகோ ஆகியோரை சந்தித்து பேசுகிறார். 200க்கும் மேற்பட்ட ஜப்பானிய நிறுவனங்கள் கலந்துகொள்ளும் முதலீட்டாளர்கள் மாநாட்டிலும் பங்கேற்கும் முதல்வர் முன்னிலையில் கியோகுடோ மற்றும் ஓம்ரான் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகிறது.

தான் திருடி பிறரை நம்ப மாட்டாள் என்பதற்கேற்ப முதல்வரின் அயலக பயணம் குறித்து அவதூறு கருத்துக்களை அ.இ.அ.தி.மு.க பொதுச் செயலாளர் முன்னாள் முதல்வர் பழனிச்சாமி போன்றவர்கள் கூறி வந்தாலும் முதல்வரின் பயணம் ஆக்கப்பூர்வமாக அமைந்துள்ளது என்பதை அங்கு அவருக்கு அளிக்கப்பட்ட அமோக வரவேற்பு உணர்த்துகிறது.

வெற்று உலாவாக வெளிநாடுகளுக்கு சுற்றுலா செல்லும் இந்திய ஒன்றியத்தின் பிரதமர் மோடி போல் அல்லாமல்

“நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக
களியியல் யானைக் கரிகால் வளவ!”

என்று பெண்பாற்புலவர் வெண்ணிக்குயத்தியாரால் புகழப்பட்ட முதல் கரிகாற்சோழன் போல் சென்ற இடங்களில் எல்லாம் முதலீடுகளை ஈர்த்தது மட்டுமின்றி மக்கள் மனங்களையும் வென்று தாயகம் திரும்புகிறார் தமிழ்நாட்டின் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## இதுவும் ஒரு குறியீடு!

அண்மையில் கர்நாடகத்தில் நடந்து முடிந்த மாநிலப் பொதுத் தேர்தலின் மூலம் பா.ஜ.கவைத் துடைத்து எறிந்து விட்டனர் அம்மாநில மக்கள்.

இது பா.ஜ.கவுக்குக் கிடைத்த மிகப்பெரும் அதிர்ச்சி.

காரணம் தென் மாநிலங்களில் அக்கட்சிக்கு இருந்த ஒரே மாநிலத்தையும் அது இழந்துவிட்டது.

பா.ஜ.கவைத் தோற்கடித்துப் பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி அமைத்த காங்கிரசின் வெற்றி, இந்திய ஒன்றியம் முழுவதும் ஓர் உற்சாகத்தைத் தந்தது எதிர்க் கட்சியினருக்கு.

இன்று எதிர்க்கட்சிகள் எல்லாம் ஓரணியில் திரண்டு வருவதைப் பார்க்க முடிகிறது.

பா.ஜ.க என்ற சர்வாதிகாரச் சக்தியை 2024 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் வீழ்த்தியே ஆகவேண்டும்.

தவறினால் அதற்கு அடுத்த பொதுத் தேர்தல் நடக்குமா என்பது கேள்விக் குறியாக நிற்கிறது.

பா.ஜ.கவை ஒரு பாசிச சக்தியாகப் பார்க்கும் அதே நேரத்தில், கர்நாடகக் காங்கிரஸ் கட்சியினர் சற்று வித்தியாசமாகப் பார்த்திருக்கிறார்கள்.

பா.ஜ.க ஒரு தீய சக்தி. அது ஒரு தீட்டுப்பட்ட கட்சி என்று, அக்கட்சி ஆட்சி செய்த பெங்களூரில் சட்ட மன்றம் இருக்கும் விதான் சௌதா கட்டிடத்தைத் தூய்மை செய்திருக்கிறார்கள்.

அதுவும் பா.ஜ.க, ஆர்.எஸ்.எஸ் பாணியில், அதே வழிமுறையில் தீட்டுக் கழிக்கும் மந்திரங்கள் ஓதியபடி, மாட்டு மூத்திரத்தைச் (கோமியத்தை) சட்டமன்ற வளாகத்தில் தெளித்துத் தீட்டு கழித்து இருக்கிறார்கள்.

இப்படித் தீட்டுக் கழிப்பதன் மூலம், பா.ஜ.க எனும் தீட்டு நீங்கி, அம்மன்றம் புனிதம் பெற்று விடுகிறதாம்.

தன் வினைத் தன்னைச் சுடும், ஓட்டப்பம் வீட்டைச் சுடும் என்பது போல, பார்ப்பனியத்தின் தீட்டும், புனிதமும் பா.ஜ.கவையே கழுவிட்டது, பெங்களூரில்.

சடங்கு, மந்திரம், தீட்டு, புனிதம் என்பதில் எல்லாம் நமக்கு நம்பிக்கை இல்லை.

தீட்டு, புனிதம் எதுவும் உண்மையில்லை. காங்கிரஸ் கட்சியினர் இது போன்ற செயல்களில் இனி இறங்காமல் இருப்பது நல்லது.

இங்கு மேற்சொன்ன நிகழ்வைச் சுட்டிக்காட்டியதற்குக் காரணம், மக்கள் விரோத பா.ஜ.கவை வீழ்த்துவதற்கு இதுவும் ஒரு குறியீடாக இருக்கிறது என்பது தான்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு: திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,
தொலைபேசி: 044-2472 6408




திராவிட இயக்கத் தமிழர் பேரவையின் சென்னை மாவட்டத் தோழர்கள் நான்காம் பயிலரங்கத்தை சென்னை, அன்பகத்தில் 21-05-2023 அன்று சிறப்பாக நடத்தி இருக்கிறார்கள். இந்நிகழ்வில் தோழர் 'பெல்' ராஜன் அறிமுகவுரையைத் தொடர்ந்து தோழர் மருதையன் "கருவறைத் தீண்டாமை - ஒரு வரலாற்றுப் பார்வை" என்ற தலைப்பில் பயிலரங்க உரையை நிகழ்த்தியுள்ளார். தோழர் மதிவாணன் வரவேற்புரையுடன், தோழர் எட்வின் தொகுப்புரையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் தோழர்கள் லாரன்ஸ், ஆ.சிங்கராயர், செல்வின், மு. மாறன், உள்ளிட்டத் பல தோழர்கள் கலந்து கொண்டனர் பார்வையாளராகத் தோழர் மா.உதயகுமார் கலந்து கொண்டார். தோழர் கார்த்தி நன்றி கூறினார்.



# கருப்புப் பணம் இல்லை; கள்ளப் பணம் !

## பேராசிரியர் நாகநாதன்

**புழக்கத்தில் இருக்கும் 2000 ரூபாய் நோட்டுகளைத் திரும்பப்பெற முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையை, பணமதிப்பிழப்பு நடவடிக்கை அல்ல, புழக்கத்தில் இருக்கும் பணத்தைத்தான் திரும்பப் பெறுகிறோம் என்று ஒன்றிய அரசுத் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளதே ?**

2,000 ரூபாயை
மாற்ற கடைசி தேதி
30-SEP-2023.
பிரதமரை மாற்ற
கடைசி சான்ஸ்
MAY-2024

புழக்கத்தில் இருக்கும் எந்தப் பணத்தைத் திரும்பப்பெற்றாலும் அது பணமதிப்பிழப்பு நடவடிக்கைக்குச் சமமானதுதான். நேரடியாகச் சொல்லாமல் மறைமுகமாகச் சொல்கிறார்கள், அவ்வளவுதான்.

**2016ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட பணமதிப்பிழப்பு நடவடிக்கை கருப்புப் பணத்தை ஒழித்து விட்டதா ?**

முதலில் கருப்புப் பணம் என்ற வார்த்தைப் பயன்பாட்டையே நான் ஒத்துக் கொள்ளமாட்டேன். கருப்பு என்பது திராவிட நிறம். கருப்புப் பணம், Black market போன்ற வார்த்தைப் பயன்பாடுகள் எல்லாம் வெள்ளை ஏகாதிபத்திய நிறவெறியின் எச்சங்கள். கள்ளப் பணம் என்ற பயன்பாடுதான் சரியானது.

2016-இல் கொண்டு வரப்பட்ட பணமதிப்பிழப்பு நடவடிக்கை பெரும் தோல்வியைச் சந்தித்தது. உலகில் வேறெங்கும் நடக்காத கொடுமைகள் இங்கு நடந்தன.



நூற்றுக்கணக்கானவர்கள் வங்கி வாசலில் காத்திருந்து இறந்தார்கள். அரசு முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவில்லை. கருப்புப் பணமும் ஒழிக்கப்படவில்லை.

500 ரூபாய், 1000 ரூபாய் நோட்டுகள் பணமதிப்பிழப்பு செய்யப்பட்டதால், சிறு, குறு, நடுத்தரத் தொழில்கள் பாதிக்கப்பட்டன. இந்தியப் பொருளாதாரத்தின் மீது விழுந்த அடி அது.

1978-இல் பிரதமர் மொரார்ஜி தேசாய்கூட பணமதிப்பிழப்பு நடவடிக்கை எடுத்தார். அது முன்னெச்சரிக்கை நடவடிக்கையுடன் கூடிய சிறப்பான செயல். ஆனால் 2016இல் அமைச்சரவையின் கூட்டுப் பொறுப்பையே அவமதித்து, தன்னிச்சையாக முடிவெடுத்தார் பிரதமர் மோடி. இன்று மட்டும் அவர்கள் குடியரசுத் தலைவரை அவமதிக்கவில்லை. அன்றே இந்த முடிவைக் குடியரசுத் தலைவரிடம் தெரிவிக்காமல் அவரையும் அவமதித்தார் மோடி. இதனை அன்றைய குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி தனது தன்வரலாறு நூலில் பதிவு செய்துள்ளார்.

கூட்டாட்சித் தத்துவத்திற்கும் எதிரான செயல் இது. மாநிலங்களையும் இதில் கலந்தாலோசிக்கவில்லை. எதேச்சதிகாரமாக ஒன்றிய அரசு நடந்து கொண்டது.

**2000 ரூபாய் நோட்டுகளைப் புழக்கத்தில் இருந்து திரும்பப்பெறுவதால் என்ன பாதிப்புகள் ஏற்படும் ?**

குறைவான அளவிலேயே 2000 ரூபாய் நோட்டுகள் புழக்கத்தில் இருந்தாலும், இது தேவையற்ற நடவடிக்கை. ஒன்றிய அரசுக்கு நெருங்கிய நண்பர்களாய் இருக்கும் பெருமுதலாளிகள் இதனால் பாதிக்கப்படமாட்டார்கள்.ஆனால் 2000 ரூபாய் நோட்டுகளைச் சேமிப்பாய் வைத்துள்ள எவ்வளவோ பேர் இதனால் பாதிக்கப்படுவார்கள். பார்ப்பனிய-பனியா கூட்டுக் கொள்ளையிலே எப்போதும் பாதிக்கப்படுவது சாதாரண மக்கள்தான் என்பது எனது கருத்து.

நேர்கண்டவர் : **வெற்றிச்செல்வன்**

## ‘இனி’க்கும் சுபவீ பதில்



**கேள்வி: முடங்கிக் கிடந்த மதவாத அமைப்புகள் ஒன்று சேர்ந்து வன்முறைக்கு வித்திடும் இந்த காலகட்டத்தில், பிரிந்து கிடக்கும் நம் இன உணர்வு அமைப்புகளை அணிதிரட்டி பதிலடி கொடுக்க முயல்வீர்களா?**

சே. இளங்கோவன், அரியாங்குப்பம், பாண்டி.

**சுபவீ பதில் : ஊட்டும் உணர்வூட்டி ஒன்றாய்த் தமிழர்களைக் கூட்டும் நமது குயில்’ என்னும் புரட்சிச் கவிஞரின் வரிகள்தாம், விடுதலைக் குயில்களின் அடிப்படை முழக்கமே. நம் பயணம் அந்தப் பாதையில் தான். ஆனாலும் ஒரே கொடி, ஒரே தலைவரின் கீழ் அனைத்துக் கட்சிகளையும் கொண்டு வரும் செயற்கை முயற்சிகள் தேவையில்லை. பொது நோக்கங்களின் அடிப்படையில் செயல்படும் கூட்டியக்கங்களை உருவாக்குவதே முதல் கட்டப்பணி என்று கருதுகிறேன். அந்தப் பணி இப்போது நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது.**

‘இனி’ இதழ்; ஜூலை 1993

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian